பரந்து கிடக்கும் இந்தப் பூமிப்பந்தில் சாதிப்பதற்கும் சரித்திரம் படைப்பதற்கும் வந்த பின்னனி வாழ்ந்த பின்னணி எல்லாம் ஓர் எல்லைக் கோட்டினை நிர்ணயம் செய்வது இல்லை. சிகரங்களை நோக்கிய கனவுகளும் கனவுகளை நனவாக்க உயர உயர சிறகடிக்கும் மனமும் சாதனைகளுக்கு அடிப்படை அமைத்துச் செல்கின்றன.






டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்திக் தலைமையகம்,

# மின்வர்த்தக துறைக்கு புது முகவரி பதித்த பாஸ்காரன்




## சங்காட் சாலாக் தோட்டம் தந்த தங்கம்

பேரா, சுங்கை சிப்புட், சங்காட் சாலாக் தோட்டத்தில் அமரர் ராதாகிருஷ்ணன்-சொர்ணம் தம்பதியரின் ஐந்து பிள்ளைகளான திருமதி வசந்தி, முனுசாமி, ரமேஷ், சிவக்குமார் ஆகியோரை உடன் பிறப்புகளாகக் கொண்டு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்த பாஸ்கரன், ஹாங்காங்கை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் உலகின் முன்னணி பட்டுவாடா நிறுவனங்களின் ஒன்றான டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் நிறுவனத்தில் ஆசிய பசிபிக் கிளையில் நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

தனது மனைவி திருமதி மாலதி, பிள்ளைகள் பிரஹலாதன், அபிராமி, சௌந்தரி ஆகியோரின் அன்பு, புரிந்துணர்வை முழுமையாகப் பெற்றுள்ள பாஸ்கரன் மாதத்தில் 15 நாட்களுக்கு மேல் அந்நிய தேசத்தில் இருக்கிறார், எஞ்சிய நாட்களில் வானவெளியில் பறந்து கொண்டு இருக்கிறார்.

உலகளாவிய நிலையில் நூற்றுக்கணக்கான கிளை நிறுவனங்களையும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ள டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனத்தின் நிர்வாகம், வர்த்தக மேம்பாடு, பயிற்சிகள் என பரபரப்பான வாழ்க்கையில் சுழன்று கொண்டு இருக்கும் பாஸ்கரன் உயர்ந்து கொண்டே போனாலும் மனம் மலேசிய மண்ணில்தான் மையமிட்டு இருக்கிறது.

அனைத்துலக அரங்கில் மிக வேகமாக வளர்ந்து வரும் மின்வர்த்தகம், அதனை பட்டுவாடா செய்யும் நிறுவனங்களில் ஏற்பாட்டு வரும் துரித மாற்றங்கள், அதன்வழி பயனீட்டாளர்கள் அடையக்கூடிய பலன்கள் ஆகியவற்றை தான் பிறந்த மலேசிய மண்ணில் வாழும் மக்களும் அனுபவிக்கவேண்டும். உலகளாவிய நிலையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி நமது மக்களின் வாழ்க்கைத் தரமும் விரல் நுனி வரை வந்து சேரவேண்டும் என திட்டமிட்டு உழைத்தார்.

சங்காட் சாலாக் தோட்டத்தில் பிறந்து வளர்ந்து, பெட்டாலிங் ஜெயா பி.பி.என். தங்கும் விடுதியில் தங்கி வெண்டோ கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பாஸ்கரனின் திட்டத்தில் மலர்ந்த விற்பனையாளரிடமிருந்து விற்பனையாளர்களுக்கு (பி2பி) விற்பனையாளரிடமிருந்து பயனீட்டாளர்களுக்கு (பி2சி) என்ற இணைய வழி விற்பனைத் திட்டத்தை, நாட்டின் தேசிய நிறுவனமான போஸ் மலேசியா நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.



போஸ் மலேசிய நிறுவனத்திற்கும் - டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனத்திற்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தின் போது பாஸ்கரன் ராதாகிருஷ்ணன்.

> “மரபு வழி வர்த்தகத்தில் காசு பணம் மட்டுமல்ல நமது பாட்டன் முப்பாட்டனின் வியர்வையின் வாசம் இருக்கிறது என்ற உண்மை எனக்குப் புரியும். எனினும் நமது வர்த்தக பாரம்பரியத்தை நிலை நாட்டவும் உலகளவில் பரவிவரும் வர்த்தக வளர்ச்சியில் நமது பங்கினை பெறுவதற்கும் இந்திய சிறு. நடுத்தர தொழில் முனைவர்கள் முனைப்பு காட்ட வேண்டும்.”

மின்வர்த்தகத் தேவைகளை நிறைவு செய்யும் மையமாக செயல்பட போகும் டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் நிறுவனம் போஸ் மலேசியா நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டம், போஸ் மலேசியா நிறுவனத்தை இவ்வட்டாரத்தின் மின்வர்த்தகத் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாக உயர்த்தும் என்று போஸ் மலேசியா நிறுவனத்தின் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோ முகமட் சாலேக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள அதிகரித்து வரும் இணைய வழி மின்வர்த்தகம் ஆண்டுக்கு 15 விழுக்காடு முதல் 20 விழுக்காடு வரை உயர்ந்து வருகிறது. மாறி வரும் இந்த புதுயுக வர்த்தகம் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள தரை வழி, ஆகாய வழி, கடல் வழி பட்டுவாடா சேவையை மேற்கொள்வதில் முன்னணி வகித்து வரும் டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் நிறுவனம் பெரும் பங்காற்றும் என டத்தோ முகமட் சாலேக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அனைத்துக அரங்கில் பொருட்கள் பட்டுவாடா செய்யும் பணியில் தங்களுக்கென தனியொரு முத்திரை பத்தித்து வரும் டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனம், 700 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள அமெரிக்க நிறுவனமாகும். தற்போது சீனா, ஹங்காங் ஆகிய நாடுகளின் மின்வர்த்தக மையங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

போஸ் மலேசிய நிறுவனத்திற்கும் - டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனத்திற்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தின்வழி, நாட்டின் பிரதான மின்வர்த்தக மையம் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலைய வளாகத்தில் செயல் படும். இந்த ஒப்பந்தத்தின்வழி பொருட்களை கொள்முதல் செய்தல் இறக்குமதி செய்தல் தொடர்பான பணிகளுக்கு டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனம்

> “மக்கள் ஓசை பத்திரிகையும் டைகர்ஸ் குளோபல் லோஜிஸ்டிக் பட்டுவாடா நிறுவனமும் இணைந்து மின்வர்த்தக துறையில் உள்ள வாய்ப்புகள் குறித்து இந்திய சிறு. நடுத்தர தொழில் முனைவர்கள் விளக்கமளிப்பு நிகழ்வை நடத்த முடியும்...”